செ.வெ.எண்: 73/ஜூன் நாள்:30.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் "திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சி " திட்டத்தினை செயல்படுத்த முதற்கட்டமாக 31 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு 5,863 கழிப்பிடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஊராட்சிமன்ற தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (30.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் "திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சி " திட்டத்தினை செயல்படுத்த முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 31 ஊராட்சி மன்றங்களைச் சார்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் நடப்பு நிதியாண்டில் (2016-2017) தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் "திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சி " திட்டத்தினை செயல்படுத்துவதற்காக முதற்கட்டமாக 11 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 31 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இளமனூர், திருஉத்திரகோசமங்கை, திருப்புல்லாணி, நொச்சியூரணி, பிரப்பன்வலசை, ஊரண்குடி, ஆனந்தூர்,கள்ளிக்குடி, கட்டிவயல், குளத்தூர், கருமொழி, விளத்தூர், கள்ளிக்குடி, குழந்தான்புரி, குமுக்கோட்டை, எஸ்.கொடிக்குளம், கவிதைக்குடி, கள்ளியடியேந்தல், மணக்குடி, ஏ.காச்சான், திருவரங்கம், உலையூர், மணலூர்,காத்தாக்குளம், பெரியஇலை, காடாமங்கலம், இடிவிலகி, எம்.எம்.கோட்டை, உசிலங்குளம், சித்திரங்குடி, எஸ்.பி.கோட்டை ஆகிய 31 ஊராட்சிகளில் 3,609 கழிப்பிடங்கள் புதிதாகவும், 2,254 கழிப்பிடங்கள் புனரமைத்திடவும் ஆக மொத்தம் 5,863 கழிப்பிடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள கிராமங்களில் சுகாதாரத்தினை மேம்படுத்தி சுற்றுப்புறத் தூய்மையில் முன்னோடியாக விளங்கிடும் விதமாக இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. ஊராட்சி மன்றத் தலைவர்களும் தங்களது ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு கழிப்பிடத்தின் பயன்பாடு குறித்த முக்கியத்துவத்தினை உணர்த்தி விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, செயற்பொறியாளர் திரு.ராமசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.ஆ.செல்லத்துரை, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கணபதி, தூய்மை பாரத திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.நவநீதன் உள்பட அரசு அலுவலர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**